
# கலைஞரும் கவிதையும்



பேராசிரியர்

# கலைஞரும்

# கவிதையும்

பகுத்தறிவுச் சோலை
உரிமை: மு. ச. அண்ணா அடியார்
உலக விஞ்ஞான பகுத்தறிவு நூல்
விற்பனையாளர்
91/10-A, நாயக்கர் புதுதெரு 3-வது சந்து
கிழக்கு கோவிந்தாபுரம்
திண்டுக்கல் - 624001.

பேராசிரியர் க. அன்பழகன், M.A., M.L.A.

மேற்கு முகவை இலக்கிய அணி

1981

மேற்கு முகவை —
இலக்கிய அணி வெளியீடு: 2.

முதற் பதிப்பு :
பேராசிரியர்–அறுபதாவது பிறந்தநாள்
(19—12—1981)

விலை : உரூபா ஒன்று

**நூல் கிடைக்கும் இடங்கள் :**

**ச. அமுதன்**, B. A,
தலைமை இலக்கிய அணிச்
செயலர்,
135, தெற்கு ரதவீதி,
திருவில்லிப்புத்தூர்.

பேராசிரியர் **க. திருமாறன்**
மேற்கு முகவை மாவட்ட
இலக்கிய அணித்தலைவர்,
சின்னப்பள்ளிவாசல் தெரு,
விருதுநகர்.

ஆயை, **மு. காசரமைதீன்**, க. மு,
மேற்கு முகவை மாவட்ட
இலக்கிய அணிச் செயலர்,
7, மரைக்காயர் தெரு,
அருப்புக்கோட்டை.

---

**விஜயா பிரிண்டர்ஸ், மதுரை-1.**

**தன்மானத் தமிழர்களே!**

**தமிழியக்கத் தோழர்களே!!**

மேற்கு முகவை மாவட்ட இலக்கிய அணியின் இரண்டாவது சாதனைதான் **'கலைஞரும் கவிதையும்'**! **'கலைஞர் கவிதைகள் திறனாய்வு'** நூலை வெளியிட்டு, நம் இனமானப் பேராசிரியர் அவர்கள் ஆற்றிய சிறப்புரைதான் — இச்சிறுநூலின் அடக்கம் !

ஒருவருடைய பேச்சைக் காசு கொடுத்துக் கேட்கவைத்த இயக்கம் - திராவிடர் இயக்கம் ! இயக்கக் கருத்துக்களையும், இனவெழுச்சிப் பேருரைகளையும், இலக்கியச் சிதறல்களையும் சின்னச்சின்ன நூற்களாக உலவவிட்ட பெருமையும் இதற்கு உண்டு !! அப் பெருமைக்குப் பெருமை சேர்ப்பதுதான் இந்நூல். அனைவரும் படித்து உணரவேண்டிய அருமையான திறனாய்வுரை. அருவியென கருத்துக்கள் விழுந்தாலும் ஆற்றொழுக்கான நடை.

பேராசிரியர் அவர்களின் இப்பேச்சு ஏற்கனவே **'முரசொலி'** (மதுரைப் பதிப்பு : 18—11—81) இதழில் வெளிவந்துள்ளது என்றாலும், அவராலே திருத்தம் செய்யப் பட்டு நூல்வடிவம் பெறுகிறது.

இதை நூல்வடிவில் உருவாக்க ஒப்புதல் அளித்த பேராசிரியர் அவர்கட்கு நெஞ்சார்ந்த நன்றி கூறி, அன்னாரின் அறுபதாவது பிறந்தநாள் பரிசாக இத்தமிழ் உலகிற்குப் படைத்து மகிழ்கின்றோம்.

வாழ்க பேராசிரியர் !!

அன்புள்ள,





பேராசிரியர் அவர்கட்கு ‘அண்ணாவின் கவிதைகள்’
நூலை மாவட்ட இலக்கிய அணிச்செயலர் அளிக்கின்றார்.



வாழ்த்துரை : தலைமை இலக்கிய அணிச்செயலர்
திரு ச. அமுதன் அவர்கள்



தலைமையுரை: பேராசிரியர் தமிழ்க்குடிமகனார்



'கலைஞர் கவிதைகள் திறனாய்வு' நூலைப் பேராசிரியர் வெளியிட, பெறுபவர் மானமிகு சு. ஆ. மு. முத்துமுருகன் (மேற்கு முகவை மாவட்ட தி. க. தலைவர்)



மேற்கு முகவை மாவட்ட இலக்கிய அணியின்
சார்பில்
1981-ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள்
31-ஆம் நாள்
அருப்புக்கோட்டை
தேவாங்கர் கலைக் கல்லூரியில் நடைபெற்ற
கலைஞர் கவிதைகள் திறனாய்வரங்கத்தில்
**'கலைஞர் கவிதைகள் திறனாய்வு'**
நூலை வெளியிட்டு,
திராவிட முன்னேற்றக் கழகப் பொதுச் செயலாளர்
சிந்தைக்கினிய செந்தமிழ்ச் சொல்லழகர்
**பேராசிரியர் க. அன்பழகன்,** M.A., M.L.A., அவர்கள்
ஆற்றிய **சிறப்புரை**

# கலைஞரும் கவிதையும்

மேற்கு முகவை மாவட்ட இலக்கிய அணியின் சார்பாக ஒரு சீரிய முயற்சியை மேற்கொண்டு, கலைஞர் அவர் களுடைய கவிதைகளை யெல்லாம் ஒன்பது புலவர்கள் பல்வேறு கோணத்திலே ஆராய்ந்து, அந்தக் கவிதைகளிலே காணப்படுகின்ற அழகான கருத்துக்களையும் அதை எடுத்துச் சொல்லுகிற பேராற்றலையும் அதற்கிடையிலே காணப் படுகின்ற நயத்தையும் சொல்லழகையும் — இவற்றை யெல்லாம் முறைப்படுத்தி விரிவாக விளக்கியுள்ள கட்டுரை நூலை இன்றைய தினம் வெளியிடுகின்ற ஒரு பெருமையை எனக்கு வழங்கியுள்ளீர்கள். அப்படி வழங்கிய மேற்கு முகவை மாவட்ட இலக்கிய அணியைச் சார்ந்த நண்பர்களுக்கெல்லாம் என்னுடைய உளமார்ந்த நன்றியையும், மகிழ்ச்சியையும் நான் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

இந்த இனிய விழா இங்கே நடைபெறுவதற்குக் காரணமாக இதற்கான சிறந்த பணிகளையெல்லாம் பொறுப் பேற்று நிறைவேற்றிய திரு **காசாமைதீன்** அவர்களுக்கும், திரு **கண்ணையன்** அவர்களுக்கும் என்னுடைய வாழ்த்துக் களை நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

இலக்கிய அணியின் சார்பில் இங்கே உரை நிகழ்த்திய நண்பர்கள் கலைஞருடைய கவிதை ஆற்றலைப் பற்றி, அந்த ஆற்றல் பிறப்பதற்கான காரணத்தைப் பற்றி எடுத்துச் சொன்னார்கள்.

## கலைஞரை நான் தமிழனாகக் காண்கிறேன்

என்னைப் பொறுத்தவரையில் கலைஞரை நான் ஒரு கவிஞன் என்று காண்பதில்லை! கலைஞரை ஒரு கதை

ஆசிரியர் என்றும் நான் காண்பதில்லை! கலைஞரை ஒரு அரசியல்வாதி என்றும் நான் காண்பதில்லை! கலைஞரை ஒரு மிகச் சிறந்த எழுத்தாளர் என்றும் நான் காண்பதில்லை! கலைஞரை ஒரு பெரிய பேச்சாளர் என்றும் நான் காண்ப தில்லை; ஆனால் நான் கலைஞரை ஒரு தமிழன் என்று காண்கின்றவன். (பலத்த கை தட்டல்)

ஒரு தமிழன் என்று காண்பது மட்டுமல்லாமல் நல்ல தமிழன் என்று உணர்ந்தவன்; நல்ல தமிழன் என்பது மட்டு மல்லாமல் அறிஞர் அண்ணா அவர்களுடைய அருமைத்தம்பி என்ற தகுதியுடையவர் (கைதட்டல் என்று கருதுபவன்; அறிஞர் அண்ணாவின் தம்பியாக இருக்க வேண்டுமானால் அதற்குச் சில தகுதிகள் வேண்டும் என்று எனக்குத் தெரியும் என்ற காரணத்தால் அந்தத் தகுதிகளைப் பெற்றவர்கள் சிலர் அதை இழந்துவிட்ட காரணத்தால் அதை இன்னும் இழக்காதவர் என்று கருதுபவன். (கைதட்டல்) இழக்காதது மட்டுமல்ல, வாழ்வதற்கு அடையாளம் அதை வளர்ப்பது என்ற காரணத்தால், அதை வளர்க்கிற ஆற்றல் பெற்றவர் என்று நான் கருதுபவன், இன்னும் சொல்லப்போனால் அவ்வரைப் போல் இன்னொருவர் இல்லாத தகுதியையும் பெற்றவர் என்ற சிறப்பை உணர்ந்தவன். (கைதட்டல்)

எனவே அவரைப் பற்றி என்னுடைய அருமை நண்பர்கள், புலவர்கள், கவிஞர்களெல்லாம் 'கலைஞர் ஒரு கவிஞர்' என்ற கோணத்திலே ஆராய்ச்சி நடத்தினாலும் அது ஒரு கோணத்திலே நடத்துகிற ஆராய்ச்சியே தவிர முழுக் கோணத்திலே நடத்துகிற ஆராய்ச்சி அல்ல என்பதையும், அவர் எட்டுக்கோணத்திலேயுமே வளைந்து வருகிறவர். அதிலே ஒரு கோணம் இந்தக் கோணம் என்பதை நான் அவர்களுக்கு நினைவூட்ட விரும்புகிறேன். (மகிழ்ச்சி– ஆரவாரம்)

ஆனால் அந்த ஒரு கோணத்திற்குள்ளே மத்தாப்பு சிறிய குச்சியாக இருந்தாலும் அது எரிகிற போது பல்வேறு

விதமான ஒளிப் பூக்களைச் சிந்துவதைப்போல அந்த ஒரு கோணத்திலே இன்றைய தினம் ஆராய்ச்சி நடத்தியவர்கள் பல்வேறு விதமான கருத்தோட்டத்தை எடுத்துக்காட்டி அதன் மூலமாகக் கலைஞருடைய பெருமைகளைக் குறிப்பிட்டிருக்கிறார்கள்.

## மனிதன் முழுமை பெறுவது எப்போது ?

மனிதன் நிறைவுடையனாவது எப்போது? என்று கேட்டால் அவன் கவிஞன் ஆகிறபோது என்று நான் எண்ணுகிறேன். மனிதனுடைய தகுதி அவன் கற்கிறபோது உருவாகிறது; கற்றதைச் சிந்திக்கிறபோது வளர்கிறது; சிந்தித்ததை வெளியிடுகிறபோது அது சிறக்கிறது; அதை முறையோடு வெளியிடுகிற ஆற்றல் பிறக்கிறபோது அது முழுமை அடைகிறது.

எனவே கவிஞன் எப்பொழுது தோன்றுகிறானென்றால் மனிதன் சிறக்கின்றபொழுது! இப்படிச் சொல்கிற காரணத்தால் கவிஞன் எல்லாம் சிறந்தவனா ! என்று நீங்கள் கேட்டு விடாதீர்கள். நான் இந்த அவையிலே பதில் சொல்லத் தயாராக இல்லை. கவிஞன் எல்லாம் சிறந்தவனா? என்ற கேள்விக்கு இடமுண்டு என்று சொன்னாலுங் கூட சிறந்த ஒரு நிலையிலே தன்னை வைத்துக் கொள்ளாத சிலர் கவிஞராக இருக்கிறார்கள் என்பதற்கு ஆதாரம் இருந்தாலுங் கூட, ஒரு மனிதன் சிறந்தவகையில் உணர்வுகளை வெளியிடும் ஒரு ஆற்றலைப் பெறுகிறபோது அவன் கவிஞனாகிறான். மனித உணர்வுகளை முழு அளவுக்குப் 'புரிந்து கொள்ளாத போது அவன் கவிஞனாக முடியாது.

கவிஞனைப் பற்றி நான் தெளிவாக சொன்னால் 'உணர்ந்ததை உள்ளவாறு உரைக்க வல்லவன் கவிஞன்; உணர்ந்ததை உள்ளவாறு உரைக்க வல்லவன் மட்டுமல்ல அதைப் பிறருக்கு அதே வகையில் உணர்த்த வல்லவன் கவிஞன்! உணருகிற ஆற்றல் பெற்றவர்களுடைய உணர்வு

களை வளர்க்க வல்லவன் கவிஞன்! எனவே அந்த வகையில் கலைஞர் அவர்கள் இந்த ஆற்றலைப் பெருக்கிக் கொண்ட காரணத்தாலே தன்னை ஒரு கவிஞனாக ஆக்கிக்கொண்டார்.

ஆனால் அவருக்கு கவிஞனாவது என்பது ஒரு குறிக் கோளாக அமையவில்லை. அவருடைய பல்வேறு பணிகளுக் கிடையில் இதுவும் ஒரு பணியாக அமைந்துவிட்டது. அவருடைய மன நிறைவிற்காக உணர்வுகளை வெளியிடு வதிலே அவருக்குத் தோன்றுகிற மகிழ்விற்காக, அரசியலிலே ஏற்படுகிற சோர்வை மாற்றுவதற்காக, மக்களுக்கு ஆற்றுகிற பணியிலே இதுவும் ஒருவகை என்ற காரணத்திற்காக கவிதைப்பணியிலே அவர் ஈடுபட்டவர் என்ற நிலையில் கலைஞர் அவர்களுக்கு அது ஒரு ஓய்வு நேரப் பணியாகவும் இருந்திருக்கிறது.

சிலநேரத்தில் ஓய்வைத் தேடிக் கொள்வதற்குப் பயன்படுகிற ஒரு பணியாகவும் இருக்கிறது. இன்னும் சிலரை ஓயவைப்ப தற்கான பணியாகவும் அது பயன்பட்டிருக்கிறது. ஓயாமல் அழுகிறவர்களைத் தேற்றுவதற்கான பணியாகவும் அதுபயன் பட்டிருக்கிறது. ஆனால் அடிப்படையிலே பார்க்கப்போனால் கலைஞரை வெளிப்படுத்துகிற, அவரது உள்ளத்தை வெளிப் படுத்துகிற ஒரு பணியாக அவருடைய கவிதைப் பணி அமைந்திருக்கின்றது.

## கவிஞனின் முழு வடிவத்தை வெளிக்காட்டுவதே கவிதை.

உண்மையான கவிஞன் யார் என்று ஆழ்ந்து எண்ணிப் பார்க்கிறபோது தன்னைத்தானே வெளிப்படுத்திக் கொள்கிற ஆற்றல் பெற்றவன் கவிஞன். தான் உணர்ந்ததை உணர்ந்த வாறு வெளிப்படுத்துகிறவன் என்று நான் முன்னாலே சொன்னேன். தன்னுடைய உள்ளத்தின் முழுத் தோற்றத்தை "The poem is the outer form of the personality of the poet" என்று தெரிவிப்பார்கள். தன்னுடைய முழு

உணர்வை - தன்னுடைய முழு இலட்சியத்தை மக்களைப் பற்றியோ நாட்டைப்பற்றியோ ஒருவன் எண்ணுகிற அந்த முழு எண்ணத்தை வெளியிடுவதிலே தான் கவிஞன் பிறக் கின்றான். அந்தவகையிலே முழுமையான தான் எண்ணு கிற அந்த முழு எண்ணத்தை-தன்னுடைய உள்ளுணர்வை- தன்னுடைய பேரார்வத்தை - தன்னுடைய வேட்கையை- குறிக்கோளை - கொள்கையை இவற்றையெல்லாம் வெளி யிடுகின்ற ஒரு வாய்ப்பாகத் தன்னுடைய ஆர்வத்தின் முழு வடிவத்தை உலகத்துக்குக் காட்டுகின்ற ஒரு வாய்ப்பாகக் கருதித்தான் கலைஞர் அவர்கள் இந்தக் கவிதைகளை வடித்திருக்கிறார்.

இன்னும் ஒருவகையிலே பார்த்தால் உரைநடை எழுது கிறபோது அந்த உரைநடையில் எவ்வளவு அழகான கருத்துக்களை - தெளிவான சிந்தனைகளை - வாதிடுவதற் கான கருத்துக்களை ஒரு ஆற்றல்மிக்க எழுத்தாளன் எழுதி னாலுங்கூட அவன் மனதிலே ஏற்படும் மகிழ்ச்சி அந்த அளவுக்குப் பிறப்பதில்லை, பேசுகிறபோது ஓரளவு மகிழ்ச்சி பிறக்கிறது. எழுதுகிறபோது ஓரளவு மகிழ்ச்சி பிறக்கிறது.

ஆனால் எழுதுகிறபோது, பேசுகிறபோது தோன்றுகிற அந்த இன்பம் கவிதை எழுதுகிறபோது கவிதையாக ஊறும் போது, கவிதையை வடிக்கிறபோது அந்த இன்பம் பெரிதா கிறது; நிறைவடைகிறது. அந்த இன்பம் அவனை மகிழ வைக்கிறது. எழுதுகிற எண்ணத்துக்கு வெற்றி கிடைக் கிறதோ இல்லையோ அதை எண்ணிப் பார்ப்பதிலே ஒரு நிறைவான வெற்றி காண்கிறான். அப்படி எண்ணிப் பார்ப் பதிலேகூட ஒன்றை முழு அளவிலே எண்ணிப் பார்க்கிற ஒரு வாய்ப்பு கவிஞனுக்கு இருக்கிறது. ஒன்றை எண்ணிப் பார்க் கின்ற வாய்ப்பு எழுத்துக்கு இருக்கிறது என்று சொன்னால் அதை முழு அளவிலே ஆழமாக எண்ணிப் பார்க்கிற ஒரு வாய்ப்பு கவிதைக்கு இருக்கிறது. அவ்வாறு முழுமையாக எண்ணிப்பார்க்கிற வாய்ப்பு கவிதையிலே எப்படி வருகிறது

என்று கேட்டால் எங்கே கற்பனை கலக்கிறதோ அங்கேதான் முழுமை வடிவம் பிறக்கிறது.

உண்மையான பகுத்தறிவுக்குக் கற்பனை தேவையில்லை என்று நண்பர்கள் வாதாடக் கூடும். பகுத்தறிவை வலியுறுத்துவதற்குக் கற்பனை தேவைப்படுகிறது. பகுத் தறிவை எண்ணிப் பார்க்கிற போது கற்பனை தேவை யில்லை. அந்தக் கற்பனை அளவோடு கூடிய கற்பனையாக இருக்கிறபோது பகுத்தறிவு சிறக்கிறது.

தந்தை பெரியார் சொன்னதைத்தான் அறிஞர் அண்ணா எழுதினார் : அறிஞர் அண்ணா எழுதியவற்றைத்தான் புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் பாடினார். ஆனால் பெரியார் சொன்ன போது — கேட்கிறபோது நம்முடைய அறிவிலே அது சென்று பதிகிறது. ஆனால் சில நேரத்திலே அது முழு அளவுக்கு நம்மை ஆட்கொள்வதில்லை. அறிஞர் அண்ணா அதை எழுதுகிறபோது ; நாம் அதைப் படிக்கிறபோது இன்னும் சற்று ஆழமாகச் சென்று பதிகிறது. புரட்சிக்கவிஞர் பாடியதைக் கேட்கிறபோது, அந்தப்பாட்டு நம்மையே உலுக்குகிறது. பெரியார் அறிவை உணர்த்துகிறார் ; அறிஞர் அண்ணா உணர்ச்சியோடு கலக்குகிறார் ; புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் உள்ளத்தையே உருக்குகிறார். ஏனென்றால் அந்தக் கவிதையிலே கலக்கிற கற்பனை உள்ளத்தைக் குழைய வைத்து அந்த உணர்விலே இரண்டறக் கலந்து விடுகிறது.

## தலைசிறந்த எழுத்தாளர் கலைஞர்

எனவே, அந்த வகையிலே எழுத்தாளர்களிலே தலை சிறந்த எழுத்தாளராக விளங்குவதற்கான வாய்ப்பை — கேட்பவர் உள்ளத்தை, படிப்பவர் உள்ளத்தை குலுக்குகிற, உலுக்குகிற அந்த உணர்வைத் தன்வயப்படுத்துகிற ஒரு பேராற்றலை எழுத்தாளன் பெறுகிறான். அப்படிப் பெறுகிற ஆற்றல் கலைஞரிடத்திலே மிகச் சிறந்து விளங்கிய

காரணத்தாலேதான் இங்கே **தமிழ்க்குடிமகனார்** அவர்கள் சொல்லுகிறபோது சொன்னார்; ''அவர் எப்பொழுதுமே தலைமை வகிக்கிற அந்த வாய்ப்பைத்தான் பெற்றிருக் கிறார். மற்றவர்கள் தலைமையில் அவர் பாடியதில்லை. அப்படி ஒரு வாய்ப்பை அவர் தேடிக் கொள்ளவில்லை'' என்று. உண்மையிலே கலைஞருக்குத் தலைமை வகிப்பது எப்படி, மற்றவர்களையெல்லாம் தலைமை வகித்து நடத்துவது எப்படி என்பது தெரியும். அவரவர் தகுதி, என்ன என்பதை அறிந்து நடக்கிற ஒரு தலைமை அவரிடத்திலே இருந்த காரணத்தினாலேதான், அவர் வருகிறபோது இன்னொருவர் தலைமை வகிக்கக் கிடைக்காமல் அவரையே தலைமை வகிக்கச் சொன்னார்கள்.

அருமையான கவிதை கூடப் பாடுவார்கள், தலைமை வகிக்க முடியாதவர்களாக இருப்பார்கள். ஆனால் கலைஞர் அவர்களிடத்தில் தலைமை வகிப்பதற்கான தகுதி இருந்தது. அந்தத் தகுதி கவிதை அரங்கிலே தலைமை வகிப்பதற்கான தகுதியையும் அவரிடத்திலே ஏற்படுத்தியிருக்கிறது.

### தலைமை உருவாவது எப்படி?

இன்னும் ஒன்றை நான் உங்களுக்கு நினைவூட்ட விரும்புகின்றேன். தலைமை என்பது அருமையான கவிதை பாடினால் மட்டும் வராது. அருமையான கதை எழுதினால் மட்டும் வராது — **தென்னரசு** அவர்களுக்காக நான் சொல்ல வில்லை! (சிரிப்பு) அல்லது பேசுகிறபோது வெட்டு ஒன்று துண்டு இரண்டு என்று பேசுகிற காரணத்தாலே மட்டும் வராது — அது சுப்பு அவர்களுக்காக நான் சொல்லவில்லை! (சிரிப்பு) அல்லது எண்ணுகிற போது விரிவாக எண்ணுகிற போது விரிவாக எண்ணுகிற காரணத்தாலே மட்டும் வராது. எனக்காக நான் சொல்லவில்லை. ஆகவே இவைகளெல்லாம் சேர்ந்து ஒன்றாகத்திரண்டு வருகின்ற ஒருதிறமை என்று சொல்லத்தக்கவகையில் பல்வேறு குணங்கள் - பல்வேறு இயல்புகள் பொருந்தி வருகிறபோதுதான் அந்தத் தலைமை

வரும். தலைமை கூடப் பலபேருக்கு வந்துவிடும், சிலபேர் அகில இந்திய ஜனநாயகக் கட்சிக்குத் தலைவர் கிடைக்காத காரணத்தால் திடீரெனத்தலைவராவார்கள். எனவே தலைமை வரும். சில பேருக்குப் பள்ளிக்கூடத்திலே கூடத்தலைமை வரும். சில பேருக்குத் தலைமை ஒரு நல்ல இசையரங்கத்திலே கிடைக்கும். அப்படித் தலைமை பல்வேறு விதத்திலே வரும். ஆனால் மக்கள் விரும்புகிற தலைமையாக அது மலராது. மக்கள் விரும்புகிற தலைமையாக மலரவேண்டுமானால் மக்களுக்காகத் தொண்டாற்றுகின்ற ஒரு ஆர்வம்-எண்ணிப் பார்க்கிற ஒரு மனப்பான்மை—அவர்களுக்காக உழைக்கின்ற ஒரு எண்ண ஓட்டம்-தியாகம் செய்கின்ற பக்குவம் இவை களெல்லாம் இருக்கின்ற போதுதான் அந்தத் தலைமைத் தகுதி உருவாகிறது.

தந்தை பெரியாரிடத்திலே ஒரு தலைமை உருவாயிற்று என்று சொன்னால் அதற்கு அடிப்படை அவர் தனக்காக வாழவில்லை என்பது. அவர் என்ன பேசினார்? எப்படி பேசினார்? எவ்வளவு பேர் ஏற்றுக் கொண்டார்கள்? அது அல்ல முக்கியம். பெரியார் அவர்கள் தனக்காக வாழாதவர் மற்றவர்களுக்கு வாழ்வளிக்கப்பாடுபடும் மனப்பான்மையை வளர்த்துக் கொண்டவர். மேலும் பொது மக்களுக்கு தொண்டாற்றுவதற்காகவே வாழ்கிறவர் என்று பொது மக்கள் ஏற்றுக்கொள்ளக்கூடிய தகுதியைப் பெற்றவர். அது அவருடைய தலைமைக்குக் காரணம்.

அறிஞர் அண்ணா அவர்கள் அதே வகையிலே, பெரியார் பெற்ற தலைமையைப் போல அறிஞர் அண்ணா பெற வில்லை. அறிஞர் அண்ணா அவர்கள் மக்களுக்கு வழி காட்டுகிற அறிவு ஆற்றல் மிக்கவர். மக்களை எல்லாம் இணைத்துச் செல்லக் கூடியவர். எல்லா மக்களும் ஏற்கக் கூடிய அளவறிந்து அந்த வகையில் தமது கொள்கையை விளக்கியவர். மக்களுக்காக வாழ்கிற, வழிகாட்டுகிற என்ற இரண்டு ஆற்றலிலேயும் அண்ணா சிறந்தவர் என்ற அந்த

எண்ணத்தாலே அறிஞர் அண்ணா அவர்களுடைய தலைமை தமிழகத்திலே சிறந்தது. அறிஞர் அண்ணாவைவிட ஏறத்தாழ அவருக்கு ஈடாக அழகாகப் பேசிய பேச்சாளர்கள் பலபேரை நான் அறிவேன். அவர்களுக்கு அந்தத் தலைமை கிடைக்கவில்லை. அறிஞர் அண்ணாவிற்கு முன்னாலே அழகொழுக எழுதுகின்ற ஆற்றல் மிக்க பல எழுத்தாளர்கள் பலபேரை நான் அறிவேன். அவர்கள் அந்தத் தகுதியைப் பெறவில்லை. அறிஞர் அண்ணா அந்தத் தலைமையைப் பெறுகின்ற தகுதியைப் பெற்றார். சில பேருக்கு ஒருவகைத் தகுதி கிடைக்கிறது. யாராவது ஒரு தலைவர் பின்னாலே போவதற்கான தகுதி. சிலபேர் ஒவ்வொரு தலைவராக மாற்றிக் கொண்டுகூடப்போய் இருக்கிறார்கள். அது அவர்கள் கண்ட அரசியல் அனுபவமே! இவன் இந்தநாள் வரை யிலேதான் தலைவனாக இருக்க தகுதியுடையவன். எனவே இன்னொருவரைத் தலைவராகப் பெற்றுக் கொள்ளலாம். நமக்கு ஒரு நல்ல தலைவன் தற்காலிகமாகத் தேவை என்று சொல்லக்கூடியவர்கள் பலபேர் உண்டு. ஆனால் அறிஞர் அண்ணா அவர்கள் தந்தை பெரியாரைத் தவிர வேறு எவரையும் தலைவராக ஏற்றுக் கொள்ளவில்லை. அதுவே தான் அவருடைய தனித் தலைமையின் தனிப் பெரும் பகுதி.

எனவே அந்த வகையிலே நீங்கள் எண்ணிப் பார்த்தால் கலைஞர் அவர்களுடைய தகுதி, தந்தை பெரியாருடைய உணர்வுகளும் பேரறிஞர் அண்ணா அவர்களுடைய உணர்வு களும் இரண்டும் கலந்து செயற்படும் ஒருவராக இருக்கின்ற காரணத்தாலே அந்தத் தகுதி அவரிடத்திலே பிறந்தது.

(கைதட்டல்)

## பெரியார்—அண்ணா வழியில் கலைஞரின் தலைமைத்தகுதி.

தந்தை பெரியாரைப்போல உறுதி, அழுத்தம்! பேரறிஞர் அண்ணாவைப்போல எடுத்துச் சொல்வதிலே ஒரு மென்மை;

ஒரு நயம். தந்தை பெரியாரைப்போல கொள்கைக்காக வாதிடுகிற மனப்பான்மை; அறிஞர் அண்ணாவைப்போல எதையும் ஏற்றுக்கொள்ளும்படியாக எடுத்துச் சொல்ல வேண்டும் என்ற நோக்கம், தந்தை பெரியாரைப்போல நாள் முழுவதும் உழைக்கிற அந்த ஆர்வம். பேரறிஞர் அண்ணா அவர்களைப்போல இரவெல்லாம் படித்து எழுத வேண்டும் என்ற அந்தநாட்டம் இப்படி அறிஞர்அண்ணா அவர்களும், தந்தை பெரியார் அவர்களும் எந்தெந்த வகையிலே கலைஞராலே அவர்களைப் பின்பற்ற முடிந்ததோ அந்த வகையிலேயெல்லாம் அந்த இருவரையும் பின்பற்றிய காரணத்தினாலேதான் கலைஞர் ஒரு தலைவரானார். கலைஞர் அவர்கள் ஒரு இளைஞனாகத் திருவாரூரிலே உயர் நிலைப்பள்ளி மாணவராக இருந்து, அதற்குப் பின்னர் இயக்கத்திலே ஒரு தொண்டராக அலைந்து, பேச்சாளராக வளர்ந்து, தந்தை பெரியாருடைய 'குடியரசு' ஏட்டிலே எழுத்தாளராகப் பணியாற்றி, பின்னர் கலைத்துறையிலே சேர்ந்து அதிலே சிறந்த உரையாடல் எழுதித்தருகிற வசன ஆசிரியராகப் பணியாற்றி,பின்னர் முரசொலி ஏட்டினை வார ஏடாகத் தொடங்கி அதன் மூலமாக இயக்கப் பணியாற்றி பின்னர் இயக்கத்திலே கழகத்தினுடைய பொருளாளராக அமர்ந்து பின்னர் அறிஞர் அண்ணா அவர்கள் விரும்புகிற அந்த எண்ணங்களை யெல்லாம் புரிந்து கொண்டு செயற் பட்டு இயக்கவளர்ச்சிக்காகத்தன்னை ஒப்படைத்து எத்தனையோ போராட்டங்களிலே ஈடுபட்டு, போராட்டத் திலே ஈடுபடுகிறபோது அதே ஊரிலிருந்து அதற்குப்பின்னர் சிறைச்சாலைக்குச் செல்ல வேண்டிய நிலைமை ஏற்பட்டால் அதனை ஏற்று, அதிலே எத்தனைத்தொல்லைகள் வந்தாலும் அவற்றைத் தாங்கிக் கொண்டு, தன்னுடைய குடும்பத்தை யேகூட இந்த இயக்கத்தினுடைய கிளைக்கழகத்தைப்போல அமைத்துக் கொண்டு அதன் மூலமாக இயக்கத்தோழர் களுடைய நம்பிக்கைக்கு உரியவராக ஆகி அறிஞர் அண்ணாவின் பாராட்டைப் பெற்று அமைச்சராகி, அதன் பின்னர் இயற்கையின் நிகழ்ச்சியினாலே முதலமைச்சராகி

முதலமைச்சர் பதவி போன காரணத்தால் இலட்சியத்தை விட்டுவிடாமல், கொள்கையை விட்டுவிடாமல், ஆட்சி யில்லாத காரணத்தால் இனி கட்சி எதற்காக என்று கருதாமல், ஆளுகிற கட்சியினுடைய அரவணைப்பு கிடைக்குமா ? என்று ஏங்காமல் வெற்றி பெற்றவர்களுடைய பின்னாலே ஓடிப்போய் மயங்காமல், நாட்டு மக்கள் மயங்கு வதற்கும் இடம் தராமல் தனித்து நின்றாலும் இறுதிவரையில் இதே நிலையில் நிற்பேன் என்ற உறுதியோடு நின்ற காரணத்தால்தான் பெரியார் — அண்ணா வழியிலே கலைஞரிடத்திலே அந்தத் தலைமைப் பொறுப்புத் தானாக வந்து சேர்ந்தது. (பலத்த கைதட்டல்)

அந்த அளவிற்கு மக்களுடைய அன்புக்கும், ஆதரவுக்கும் உரியவரான காரணத்தாலேதான் அவரைக் கலைஞர் என்று சொன்னாலும் அது அவரை நிறைவுபடுத்தவில்லை. கவிஞர் என்று சொன்னாலும் அவரை நிறைவு படுத்த வில்லை; அவரை இயற்றமிழ் வல்லுநர் என்று சொன்னாலும் நிறைவு படுத்தவில்லை; 'டாக்டர்' என்று பல்கலை கழகத்திலே கொடுத்த பட்டத்தாலே சொன்னாலும் அதுவும் அவரை நிறைவு படுத்தவில்லை. டாக்டர்கள் எப்படி, எப்படி உருவாகிறார்கள் என்று **தமிழ்க்குடிமகனார்** அவர்களும், மற்றவர்களும் இங்கே எடுத்துச் சொன்னார்கள். எனவே அதுவும் அவரை நிறைவுபடுத்தவில்லை. இனி ஒரு முதலமைச்சர் என்றாலும் அது நிறைவாக அமையவில்லை. ஒரு கட்சித் தலைவன் என்றாலும் போதுமானதாக அமைய வில்லை. ஆகவேதான் கலைஞர் இன்றைய தினம் ''தமிழினத் தலைவராக'' ஒரு இனத்தினுடைய தலைவராக (பலத்தகைதட்டல்) இன்றைய தினம் மக்களாலே குறிப்பிடப் பட வேண்டிய ஒரு நிலைமைக்கு உரியவரானார்.

இன்றைக்கு எண்ணிப்பார்க்கிறபோது; எந்தக் கோணத்திலே ஆராயவேண்டுமென்று நான் கருதுகிறேன் என்றால் அவர் தமிழினத் தலைவராக ஆனதற்கு என்ன

காரணம்? அதை ஆராய்கிறபோது கலைஞரை முழு அளவிற்கு ஆராய்கிற வாய்ப்பு நமக்கு கிடைக்கும் இங்கே நம்முடைய அருமை நண்பர்கள் இந்த நூலிலே கட்டுரையாகத் தீட்டியிருக்கிற அந்தக் கருத்துக்களின்படி பார்த்தால் கலைஞர் கவிதைகளிலே கலைஞருடைய பாணி-அமைப்பு என்ற ஒன்றை நமது **தமிழ்க்குடிமகன்** அவர்கள் ஆராய்ந்து இருக்கிறார்.

கவிதையின் பாணி என்பது இலக்கியத்திலே வல்லுநராக இருக்கிற புலவர்கள், இலக்கணத்திலே சிறந்தவர்களாக உள்ளவர்கள் காலாகாலத்திலேயும் கவிதையினுடைய மரபு எப்படியெல்லாம் வளர்ந்து வந்திருக்கிறது என்ற கண்ணோட்டத்திலே ஆராய்வது.

## இலக்கண வழிக் கவிதையும் புதுக் கவிதையும்.

ஒரு காலத்திலே கவிதைகள் முழு அளவுக்கு இலக்கணக் கட்டுப்பாடோடு அமைவது அவசியமாக இருந்தது. அவற்றுக்கு இரண்டு காரணம். ஒன்று கவிதைக்குப் பாது காப்பு. மற்றொன்று மக்கள் கவிதையைப்பாடபேதமுறாமல் பாதுகாக்க அது ஏற்புடையது. அக்காலத்திலே கவிதைகள் இயற்றப்பட்டவுடன் அச்சேற்றப்படுகிற நிலைமை இல்லை. கவிஞன் பாடுவான். எழுதி வைக்காமல் கூட விட்டுவிடுவான். இன்னும் இரட்டைப் புலவர்கள்போலே முதல் இரண்டடி ஒரு புலவன் பாட, பின் இரண்டடி மற்றொரு புலவன் பாடுவானேயானால் இரண்டு பேரும் மறந்தாலும் மறக்கலாம். இரண்டு பேருமே மறுபடியும் பாடி அதை நிறைவு செய்தாலும் அப்படிப்பட்ட காலத்தில் ஓலைச் சுவடிகளில் எழுதி வைக்கப் படுவது என்ற அளவுக்கு மட்டுமே ஓரளவு பாதுகாக்கப்பட்ட காலத்தில் ஓலைச் சுவடிகளில் உள்ள எழுத்துக்கள் பல நேரத்திலே தெளிவாக அறிய முடியாத நிலை அமைவதுண்டு. அச்சு இயற்றுகிற காலத்திலே பொறி களாலே அச்சு இயற்றப்பட்டுக் காணப்படுகின்ற பொழுது,

அந்த எழுத்துக்கள் பிரிந்து காணப்படுவதைப் போல சொற்கள் பிரிந்து நிற்பதைப்போல அசை அசையாகக் கூடப் பிரித்துக் காட்டுவதற்கு வாய்ப்பு இருப்பதைப்போல இல்லாத காலத்தில் தொடர்ந்து எழுதுகிற போது, அதுவும் கூட்டு எழுத்துக்கள் கொண்டு எழுதப்படுகின்ற காலத்தில் ஒரு கவிதையிலே வருகின்ற சொல், இந்தச் சொல்தானா அவர் பயன்படுத்தியது? அவர் 'கல்' என்று சொன்னாரா? 'கள்' என்று சொன்னாரா? அவர் 'வால்' என்று சொன்னாரா? 'வாள்' என்று சொன்னாரா? என்று ஐயம் வருகிறபோது பல்வேறு ஐயங்களை நீக்கிக் கொள்வதற்கு உறுதுணையாக— அவசியமாக இருந்த ஒரு அடிப்படையில் இலக்கண முறை யோடு அசை, சீர், தளை இவற்றையெல்லாம் கண்டு எழுதி வருகின்ற முறை பெருமளவிற்குப் பயன்பட்டது; இன்றி யமையாததாகவும் இருந்தது.

ஆனால் இன்று அப்படி அல்ல. இங்கே நண்பர்கள் பேசுகின்ற பொழுது புதுக் கவிதையைப் பற்றிச் சொன்னார்கள். புதுக்கவிதை என்று சொன்னால், அது கருத்துகளாலே புதுக்கவிதை என்று ஒருவகையிலே சொன்னால் நான் ஓரளவு ஏற்றுக் கொள்ளத்தயார். ஏனென்றால் சில எண்ணங்களைச் சில காலத்தில் சில முறை களிலே வெளியிடுகிறபோது அது புதுமை பெறுகிறது. அதே எண்ணத்தை இன்னொரு காலத்தில் வெளியிட்டால் அது புதுமை பெறாது. இன்றைக்கு ஒன்று புதுமையாகத் தோன்றும். அது நாளைக்குப் புதுமையாக இருக்காது.

ஆகவே புதுக் கவிதைகள் எல்லாம் நிச்சயமாக நீண்ட காலம் நிலைப்பது என்று நான் கருதமாட்டேன். ஆனால் தற்போது அது புதுக்கவிதைதான்! ஒரு பெண் நிறைவெய்து கிறாள் அல்லது புதுமை பெறுகிறாள் அல்லது மலர்ச்சி எய்துகிறாள் என்று சொன்னால் அந்த கால கட்டத்திலே அதற்கு மதிப்பு; அதுபோல புதுக்கவிதை என்று சொல்வது ஒரு கால கட்டத்திலே அது புதுக்கவிதை. இன்னும் ஒரு

இருபதாண்டுகள் கழித்து அந்தக் கருத்துகளை நோக்குகிற போது அது சிறப்புடையதாக இருக்குமா? என்று எனக்குத் தெரியவில்லை.

ஆனால் மக்களுக்குத் தேவைப்படுகிற ஒரு எண்ண ஓட்டத்தை—ஒரு புரட்சி மனப்பான்மையை ஒரு புதுமைச் சிந்தனையை—ஒரு வேகத்தை அல்லது உள்ளக் குமுறலைப் படம் பிடித்துக்காட்டுகின்ற ஒரு ஆற்றலைப் புதுக்கவிதை பெற்றிருக்கிறது என்று சொன்னால் எனக்கு மாறுபாடு இல்லை.

## அழகு கவிதையுடன் பிறந்தது அழகில்லாதது கவிதையல்ல !

ஆனால் கவிதைகளிலே வருகிற கருத்துக்களிலே உள்ள அழகு என்பது நீண்ட நெடுங்காலமாக அது கவிதையோடு உடன் பிறந்தது. அழகு இல்லாத போது அது கவிதைஅல்ல; நயம் இல்லாத போது அது ‘பா’ அல்ல ; ஓசையில்லாத போது அது பாட்டு அல்ல; எனவே அழகு என்பது இயற்கையோடு பொருந்தியது; கவிதையோடு உடன் பிறந்தது. அழகில்லாத கவிதை என்றைக்கும் பிறந்ததில்லை; பிறந்திருந்தாலும் அது வாழ்ந்ததில்லை.

சங்ககாலத்திலே பிறந்த கவிதைகளாக இருந்தாலும் இடைக்காலத்திலே நாயன்மார்கள் பாடிய பாடலாக இருந்தாலும், வள்ளலார் அருட்பாவாக இருந்தாலும்—அத்தனையும் கவிதை நலன்களுக்கெல்லாம் எடுத்துக் காட்டாக விளங்குவனவே ; கருத்துக்களிலே வேறுபாடு வரலாம்.

இறைவனை வேண்டி வேண்டி உருகிப்பாடி என்னபயன்? என்று நம்முடைய புலவர்கள் கேட்கலாம் அல்லது பகுத்தறிவு வாதிகள் கேட்கலாம். ஆனால் பாடியவனுடைய பாட்டினுடைய ஆழமான கருத்துக்கள்; அவ்வளவு சிறந்த எண்ணங்கள். அந்த எண்ணங்களை நாம் மறந்துவிட முடியாது.

அந்த அழகை நாம் மறந்துவிடமுடியாது. அவையெல்லாம் சேர்ந்துதான் தமிழைக் காப்பாற்றின. தமிழனுடைய பண்பாட்டைவிட வேறுசில பண்பாடுகளுக்கு வழிவிடுவதற்குக் காரணமாக இருந்தாலுங்கூட, அல்லது பக்தி மனப்பான்மை காரணமாக—பகுத்தறிவு மனப்பான்மை ஓங்கி வளர்வதற்கு இடந்தராது போய் விட்டாலுங்கூட, பழமைச் சிந்தனையிலே ஆழ்த்தியதன் மூலமாகப் புதுமைச் சிந்தனைக்கு வழிவகுக்காமல் போனாலுங்கூட — தமிழ் மொழியினுடைய நடைவளத்தை, தமிழ் மொழியினுடைய தனிச்சிறப்பைத் தமிழ் மொழியினுடைய பேராற்றலைத் தொடர்ந்து பாதுகாத்த பெருமை அந்தக் கவிதைகளுக்கெல்லாம் உண்டு. தொல்காப்பியர் இயற்றிய இலக்கணத்தினுடைய காலத்திலே தொடங்கி, அதற்கு முன்னால் இருந்த ஏடுகள் கிடைக்காத காரணத்தால் சங்க இலக்கிய ஏடுகளிலே தொடங்கி, வடலூர் வள்ளலார் பாடல் வரையில் புதுமை எண்ணங்கள் மிகுதியாக இடம் பெறாத அந்த காலத்தில்-வள்ளலாரிடத்திலே புதுமை எண்ணங்கள் இடம் பெற்றன. மாணிக்கவாசகர் பாடலிலே கூடச்சில புதுமை எண்ணங்கள் இடம் பெற்றன. ஆனால் பக்தி உணர்வோடு கலந்து அது இடம் பெற்றதற்கு மாறாக பக்தியிலே இருந்து விடுபட்டு, புதிய எண்ணங்கள் வெளிப்படுகின்ற காலமாக—தொடக்க காலமாக பாரதியார் காலமும் அதைநிறைவு செய்கிறகாலமாகப் புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் அவர்களுடைய காலமும் அமைந்திருக்கிறது என்று நான் கருதினாலுங்கூட இடையீடில்லாமல் தமிழைக் காப்பாற்றுவதற்கு உறுதுணையாக இருந்த ஏடுகள் என்ற வகையிலே அவையெல்லாம் காப்பாற்றப்பட வேண்டும் பாதுகாக்கப்பட வேண்டும். அவற்றைப் பாதுகாக்கின்ற உணர்வும் நமக்குவேண்டும்

தமிழ் மொழியினுடைய வளத்தை அந்த ஏடுகள் பாதுகாத்தன. தமிழ்மொழியாலே முடியும் என்ற நம்பிக்கைக்கு அவை உறுதுணையாக இருந்தன. தமிழ் அழியாமல், தமிழ் மொழி இருக்கிற இடத்திலே வேறுமொழி இடம் பெற்று

விடாமல் தடுப்பதற்கு அவை காரணமாக இருந்தன. அந்த ஏடுகளெல்லாம் துணை நின்றன. அந்தக் கவிதைகளிலே காணப்படுகின்ற கட்டுப்பாடு அல்லது மரபு போற்றுதல் அல்லது எழுத்து, சீர், தளை இவற்றைப் பாதுகாத்தல் இன்றியமையாத ஒரு கடமையாக இருந்தது என்றுதான் நான் கருதுகிறேன்.

ஆனால் இந்த இருபதாம் நூற்றாண்டில் அச்சியற்றும் வாய்ப்போடு எழுதப்படுகிற கவிதைகளை மக்களிடத்திலே வழங்குகிற ஒரு சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறபோது, இன்றைக்கு அந்தக் கவிதைகளை அதே நடையில் அதே எழுத்து, சீர், தளை இவைகளைப் பாதுகாத்துத்தான் இயற்ற வேண்டும் என்ற அவசியம் மிகுதியாக இல்லை.

சீரும் தளையும் பிறழலாம். தகுந்த உவமை தவறாது கிடைக்குமானால் அப்பொழுது சொல்லப்பட்ட இலக்கணப் படி அதே அசைகள் அப்படியே இருக்கவேண்டும் என்ற அவசியம் இல்லை. கலைஞர் அவர்களே குறிப்பிட்டிருப் பதைப்போல ''சீருக்கும் தளைக்கும் அசைக்கும் எதிரியல்ல. ஆனால் அவைதான் என்னோடு ஒத்துழைக்கவில்லை. அவைதான் என்னோடு உடன்பாடு கொள்ளவில்லை. என்னுடைய சீருக்கும் தளைக்கும் எட்டு மாசம்'' என்று சொல்லி இன்னும் அந்தக் குழந்தை பிறக்கவில்லை என்று விளக்கங்கள் சொல்வதன் மூலமாகக் கலைஞர் அவர்கள் இதை ஒப்புக் கொண்டு சொல்லியிருக்கிறார்.

ஆனால் அவராலேயே உரை நடையிலே இயற்றப்படுவ தெல்லாம் கவிதையாகுமா ? என்று கேட்டால், அவரது உரை நடையே கூட ஒருவகையில் கவிதை நடையாக மிளிர்கிறது எனலாம்.

### அண்ணாவின் உரைநடையே கவிதையாக மிளிர்ந்தது.

அறிஞர் அண்ணா உரைநடை எழுதுகிறபோதே சில வற்றைக் கவிதை நடையிலே எழுதியவர்கள். கவிதை நடை

என்பது உள்ளத்தில் கிளர்ச்சியை உருவாக்குவதற்குப் பயன் படுகின்ற ஒரு அழகான கருவி. கவிதை என்பது அதனுடைய வடிவத்தினாலே மனிதனுடைய உள்ளத்தைத் தூண்டுகிறது. அழகு எப்படியெல்லாம் மனிதனைக் கவரு கிறது என்பது எல்லா மனிதர்களுக்கும் தெரியும். துணிமணி அழகாக இருந்தாலும் சரி அல்லது உடுத்தியிருக்கிற பெண் அழகாக இருந்தாலும் சரி அல்லது கடையிலே இருக்கிற பண்டம் அழகாக இருந்தாலும் சரி, ஒரு புத்தகத் தினுடைய அட்டை அழகாக இருந்தாலும் சரி, இந்த அழகுகள் மனிதனை எப்பொழுதும் கவர்ந்து கொண்டேயிருக் கின்றன.

இந்த அழகு கவிதையிலே காணப்படுவதென்பது ஓசை யினாலே மட்டுமல்ல; அதனுள்ளேயுள்ள கருப்பொருளா லேயும் அந்த அழகு காணப்பட வேண்டும். அந்த அழகு சொல்லுகிற முறையினாலே எண்ணுகிற வகையினாலே எந்த வகையிலே அவனாலே எண்ணமுடிகிறதோ அதைப்பொறுத்து அமைகிறது. அறிஞர் அண்ணா அவர்கள் எழுதிய எத்தனையோ கட்டுரைகள் பொங்கல் வாழ்த்தாக அவர்கள் தீட்டிய கட்டுரைகள் படிக்கின்றபோது கட்டுரையாக நிற்காது, கட்டுரைகளுக்கு அப்பாற்பட்டு நம்மை எங்கோ இழுத்துச் செல்கிற ஒரு பேராற்றல் வாய்ந்ததாக விளங்கும். அதற்குக் காரணம் அவர் கவிதை வடிவிலே உரை தீட்டிய வண்ணம் கவிதை உணர்வுகளோடு கலந்து எழுதிய ஒரு பெரும் புலவர் அவர்.

## 'கலைஞர் கவிதைகள் திறனாய்வு' நூல்.

அதைப் போல, கலைஞர் அவர்கள் தான் எழுதுகிற கட்டுரைகளிலே கூட சிலநேரங்களிலே அந்த கவிதை நடையைப் பயன்படுத்துவதுண்டு. ஆனால், முழுக் கவிதை யாக அவர் வடித்துத்தந்த கவிதைகளிலே இலக்கணம் முழு அளவுக்கு ஒத்து வராவிட்டாலுங்கூட கவிதையினுடைய உயிர்ப் பொருளாக இருக்கின்ற அந்த உணர்வைத் தூண்டு

கிற எழுச்சியூட்டுகின்ற அந்த ஆற்றல் கலைஞருடைய கவிதைகளிலே நிரம்பக் காணப்படுகிறது. அதைத் **தமிழ்க் குடிமகன்** அவர்கள் வரவேற்றுப் பாராட்டியிருக்கின்றார்.

அவருடைய கவிதைகளிலே காணப்படுகின்ற உவமை நயம் குறித்து **டாக்டர் விநாயகமூர்த்தி** அவர்கள் எழுதியிருக்கிறார்கள். கலைஞர் பாடல்களிலே யாப்பு எப்படி அமைகிறது என்பது பற்றி, அந்த யாப்பு எளிய முறையிலே அவரால் எப்படி கையாளப்படுகிறது என்பதைப் பற்றிப் **பூங்காவனம்** அவர்கள் எழுதியிருக்கிறார்கள். அவருடைய கற்பனை வளத்தைப் பற்றி நம்முடைய தோழர் **மலைச்சாமி எம். ஏ.** அவர்கள் கட்டுரையாக வடித்திருக் கிறார்கள். கலைஞர் கவிதைகளிலே பகுத்தறிவு பற்றி **அறிவரசன்** அவர்கள் எழுதியிருக்கிறார்கள். அவர் கவிதை களிலே புரட்சிக்கவிஞர் எப்படி நடமாடுகிறார் என்பதை **இளமாறன்** எடுத்துக்காட்டுகிறார். இனநலத்தை அவர் எப்படிப் போற்றுகிறார் என்பதைக் **கண்ணையன்** அவர்கள் எடுத்துக் காட்டுகிறார். கலைஞர் கவிதைகளும் அவை காட்டும் மொழி உணர்வும், அதைக் குறித்து நம்முடைய நண்பர் **காசாமைதீன்** அவர்கள் எழுதியிருக்கிறார். கலைஞர் கவிதைகளிலே குறள் எப்படி இடம் பெற்றிருக்கிறது என்பதை நம்முடைய **திருமாறன்** அவர்கள் எழுதியிருக் கிறார். இவையெல்லாவற்றையும் சேர்த்துப்பார்ப்பதாக இருந்தால் கலைஞருடைய கவிதைகள் வடிவு பெற்ற அடிப்படை நமக்குத் தெரியும்.

### 'அண்ணா வழியில்'<br>கலைஞர் தீட்டிய சுவைமிகு கவிதை

கலைஞரை இப்படி இப்படிப் பிரித்துப் பார்ப்பதைவிட தொகுத்துப் பார்க்கிறபோது ஒரு முழுவடிவம் தெரியும் என்று சொன்னேன்; அந்த வடிவத்தை நான் எதில் காண்கிறேன் என்றால், அவரே 15. 9. 75-இல் '**அண்ணாவழியில்**' என்ற தலைப்பிலே ஒரு கவிதை தீட்டியிருக்கின்றார். அந்தக்

கவிதையைப் படித்தால் அதிலே கலைஞர் கருணாநிதி உடன் நடந்து வருவார். அந்தக் கவிதையிலே,

தமிழே! தேனே! தங்கக் கனியே!
அமிழ்தே! அன்பே! அழகுக் கலையே!
எழிலே! அறிவே! எண்ணச் சுடரே!
பொழிலே! புகழே! பொன்னின் மணியே!
திருவே! உருவே திங்கட் குளிரே!

மாணிக்கவாசகர் வருகிறார். வடலூர் வள்ளலார் வருகிறார் இன்னும் தமிழ்ப்பண்பாளர்கள் பாடிய அந்தச் சொற்ளெல்லாம் இடம் பெறுகின்றன.

தருவே! நிழலே! நிழல்தரு சுகமே!
தாயே! உன்றன் தாளினைப் பற்றி

இது கலைஞர் கருணாநிதி அவர்கள் தமிழ்த்தாயினை உள்ளத்திலே கொண்டுதான் இந்தத் தொண்டெல்லாம் செய்கிறார் என்பதற்குச் சான்று!

'தாயே உன்றன் தாளினைப்பற்றி' அப்பொழுதும் தமிழ்க் கவிதையைப் பாடிடவரவில்லை. 'தலைமைக் கவிதை பாடிட வந்தேன் என்கிறார். அது அவருடைய சொந்த வடிவம் (சிரிப்பு) இந்தத் தலைமை என்பது அவரோடு பிறந்தது. சிலபேருக்குக் கூடவே பிறக்கும். (கைதட்டல்) எனவே, 'தலைமைக் கவிதை பாடிட வந்தேன்' என்பது இயல்பாகவே பொருந்துகிறது.

'அண்ணா வழியில் அயரா துழைக்கப்
பண்ணால் முழங்கிப் பயணம் தொடரக்
கண்போல் கழகம் காக்கும் சூளுரை
விண்போய் முட்டிட உரக்கக் கூவுக !'

அவருடைய உணர்வு இதில் வெளியிடப்படுகிறது.

'அண்ணாவழியில் அயரா துழைக்கப் பண்ணால் முழங்கி, அது வெற்றுச் சொல்லாய் முழங்காமல், 'அண்ணா நாமம்'

வாழ்க என்று சொல்லாமல் (சிரிப்பு) 'பண்ணால் முழங்கிப் பயணம் தொடர, 'பயணம் என்பது கடுமையான பயணம், எனவே, அந்தப் பயணத்தைத் தொடர்ந்து நடத்த' கண் போல் கழகம் காக்கும் சூளுரை விண்போய் முட்டிட உரக்கக் கூவுக!'' ஏன் விண்போய் முட்டிட என்றால் அண்ணாவுக்கும் கேட்கும்படி விண்போய் முட்டிட உரக்கக் கூவுக' என்று நண்பர்களுக்கு சொல்கிறார்.

'இன்றைக்கு நடந்ததுபோல் இருக்குதய்யோ!— கழகக்
கன்றைவிட்டுப் பசுபிரிந்த அந்தக் காட்சி.
குன்றைத் துளைக்குமொரு வேலெடுத்துக்
குறிபார்த்து நெஞ்சைக் கிழித்ததுபோல்
என்றைக்கும் நம்மைவிட்டுப் பிரியாத அண்ணன்
அன்றைக்கு மறைந்துவிட்டான்; அய்யகோ!
ஆயிற்று ஏழெட்டாண்டு!
'கொன்றைவேந்தன்' என அவ்வையின் பாட்டுண்டு; நம்
கொள்கை வேந்தனுக்கோ அழியாத பாட்டுண்டு!
பொங்குகடல் நடையும் பூவையரின் மென்னடையும் தன்
புதுத்தமிழ் நடையில் காட்டியவன்
பொல்லாங்கு உரைப்போரை வாதத்தில் மாட்டியவன்!
பொடியெடுத்துப் போடும் நேரம்
புன்னகையால் எதிரிகளைப்
பொடியாக்கி வாட்டியவன்!
புழுதிக்குணம் படைத்தோரை ஓட்டியவன்!
(சிலபேர் மிச்சமிருந்து பின்னாலே ஓடினார்கள்)
பொன்மகுடம் தமிழ்த்தாய்க்குச் சூட்டியவன்
எழுதுகோல் வைத்திருந்தான் அண்ணன்—அது
ஏமாந்த தமிழர்களின் தலையெழுத்தை மாற்றத்
தாளில் உழுத கோல் — நம்
நாளில் அழுதவரைச் சிரிக்க வைக்க
அவன் தந்த ஆட்சிக்கோல்
குதிகால்கள் பரதம் ஆடப் பேச்சரங்கில்
கொய்யாத் தமிழ் எடுத்துக் கொடுத்திட்டார்!

சதிகாரர் சாய்க்கின்றார் தமிழ் மொழியை என்ற போது
அவர்,
மொழிப் போரின் மூலபலம்! களம்கண்டு
விழிப்போரைக் கண்டுகொண்டு – தன்னைப்
பழித்தோரைப் பாராட்டும் பண்பாளர்.
அழித்தாராம் ஆதிக்க மொழி வெறியை
பலகார பட்சணம் — பாணிக்கிரகணம்
வதூவர கிரகப்பிரவேசம் பந்துமித்திரர்
நமஸ்காரம் — உபய குசலோபரி
நாமாவளி — துவஜா ரோகணம் என
நாக்குக்கு நுழையாத வடமொழிப் படையெடுப்பால்
வாக்குக்குச் சுவை சேர்க்கும் வண்ணத் தமிழ்
வாடுவதோ ?
பாக்குக்கும் வெற்றிலைச் சுண்ணாம்புக்கும்
அவர் வாய் சிவக்கும்
தாக்குதற்குத் தமிழைப் பிறமொழி பெருகிவந்தால்
அவர்கண் சிவக்கும்
அக்ராசனாபதியை அவைத்தலைவராய் உலவவிட்டார்.
அந்தநாள் பிரசங்கம் சொற்பொழிவாய்
மாற்றிற்றின்று !
நமஸ்காரம் கிமஸ்காரம், எல்லாம்
நலமான தமிழிலே நல்வணக்கமாய்
மலர்ந்தது காண் !
தூய்மையாய்த் தமிழில் கொடியேற்று விழா
வந்த பின்னர்
துவஜாரோகணத்துக்கு அங்கென்ன வேலை ?
வாய்மையே வெல்லுமென்றால்
'சத்யமேவ ஜெயதே' கோபித்தா கொள்ளும் ?
அண்ணனை ஒரு சீமான் என்பேன் !
அவர் நண்பர்களையே செல்வமாய்ப் பெற்றிருந்தார் !
அண்ணனை ஒரு துறவி என்பேன் !
அவர் வாயெல்லாம் காவி தரித்திருந்தார்.
அண்ணனை ஒரு தெய்வம் என்பேன் !

அவருக்குத் துரோகிகளும் தூபதீபம் காட்டுகின்றார் !
அண்ணனை ஒரு கண்ணன் என்பேன் !
அவரைப் பூதகியும் தூக்கிப்பால் கொடுக்கின்றாள் !
அரியாசனமாய் அவர் நம் இதயத்தை ஆக்கிக்
கொண்டார்

அரியா சனங்கள் அவரை ஆரம்பத்தில்
புரியாமல் எதிர்ததுண்டு !—
சரியாசனச் சமதர்மம் போதிக்க வந்த
தென்னாட்டு மார்க்ஸ் என்று
பின்னால்தான் தெளிவடைந்தார்.
நரியும் பரியாய்ப் போனகதை,
நாரதர் பெண்ணாய் ஆனகதை,
உரியைக் கண்ணன் உடைத்தகதை,
ஊரார் போற்றிய பழையகதை !
எரியில் துரும்பாய் ஆக்கியவர்
பெரியார் தந்த பேரறிஞர் !

'பெரியார் தந்த பேரறிஞர்' என்று அறிஞர் அண்ணாவை, அவரைப் போற்றுகிற வகையிலே எடுத்துச் சொல்லுகிற அந்த வழியிலேயே கலைஞர் கருணாநிதி, 'பெரியார் போற்றிய, பெரியார் தந்த பேரறிஞர் வழிவந்தவர் கலைஞர் கருணாநிதி' என்று சொல்லத்தக்க வகையில் கலைஞருக்கே ஒரு முன்னுரையாக, தான் எந்த ஒரு இலட்சியப் பாதையிலே நடைபோடுகிறோம் என்ற எண்ணத்தை முழு வகையிலே எடுத்துக்காட்டுகிற பகுதி இது.

மேலும் சொல்லுகிறார் ;

இரக்கமெனும் ஒரு பொருளிலே அரக்கனென
இராவணனைக் கம்பன் இகழ்ந்தது செல்லாதென
உருக்கமிகு ஓவியத்தை எழுத்தால் தீட்டிச்
சுருக்கென்று தைக்கின்ற கேள்விகளால்
தேவலோகப் பிறவிகளைத் தெருவுக்கு இழுத்து வந்தார்.
மேனிப்பசி முழுதும் தீர்ந்த பின்னர்
மேனகையைக் கைவிட்ட மாமுனியும்

தந்திரத்தால் அகலிகையைச் சுவைபார்த்த
இந்திரனாம் இணையற்ற பெருவேந்தும்
கருணையின் வடிவங்கள் தாமோ?
கம்பரே! இராவணன்தான் கடுநெஞ்சக் காவலனோ?
அண்ணன் எழுப்பிய வினாக்கணைக்கு—இந்த
மண்ணில் எவர்தான் விடையளிப்பார்?
அண்ணன் எழுதிய நூல்கொண்டு
சின்னக் கதையொன்று நெய்கின்றேன் —

என்று அறிஞர் அண்ணாவினுடைய சந்திரோதயம், ஓர் இரவு, வேலைக்காரி, சந்திரமோகன், காதல்ஜோதி, சொர்க்கவாசல் இன்னும் அவராலே வெளியிடப்பட்ட பல் வேறு நாடகங்களினுடைய தலைப்புக்கள் இவற்றை யெல்லாம் தொகுத்து அழகுபட அவற்றையே ஒருகதைக் குரிய தொடர்புடைய பொருளாக ஆக்கி, அதன் பிறகு இறுதியாகச் சொல்கிற போது ;

அண்ணா! உன்வழியில் அயராமல் நடப்பதெல்லாம்
கண்ணால் ஒருமுறை நீ பார்த்துவிட்டால் எம் கவலை
யெல்லாம் பறந்துபோகும்.
தண்ணார் முழுநிலவே
தட்டாமல் நீ வந்துவிடு!
இந்த வரம் நீ தந்தால்
இறவா வரம் பெற்றதுபோல்
இன்பத் தமிழகமே கூத்தாடும்—எங்கள்
துன்பமெலாம் தொலைந்துவிடும்

என்று சொல்லி,

'அண்ணா வாழ்க' என்பதே நமக்கு
முதலுரையும்
முடிவுரையும்
அதனாலே அனைவரும் சொல்வோம்
அண்ணா வாழ்க!
அண்ணா வாழ்க!
அண்ணா வாழ்க!

வணக்கம்!! என்று அந்தக்கவிதையைச் சொல்லி முடிக்கின்றார்.

அந்தக் கவிதையிலேதான் கலைஞருடைய உள்ளுணர்வாலே அறிஞர் அண்ணாவின் வழியிலே நடப்பதற்கு உறுதி பூண்டவர் என்பதை முழுவகையில் காண முடியும். அந்த உணர்வுதான் இன்றைக்கு அவருடைய கவிதைகளுக்குப் பெருமை. இந்த உணர்வு இல்லாதவர் கவிதை இயற்றுவாரே ஆனால் அந்தக் கவிதை சிறக்காது. நான் இங்கே அந்த ஒன்பது நவரசங்களைத் தேடித் தந்த – இந்த நவமணிகளாக இருக்கிற அந்தப் புலவர்களுங்கூட அறிஞர் அண்ணாவைப் போற்றி பெரியாரை வாழ்த்தி, அந்த உணர்வுகளை மக்களிடத்திலே தொடர்ந்து எடுத்துச் சொல்லுகிற ஒரு கடமையை கலைஞர் செய்யாமல் வேறு வகைக் கவிதைகளை இயற்றி இருப்பாரேயானால் இப்படிப் பாராட்டி இருப்பார்களா என்பது ஐயந்தான்!

## கவிதைகளில் உள்ள கருத்துக்களே நமக்கு உயிர்ப்பொருள்

கவிதைகளல்ல; கவிதைகளிலே உள்ள கருத்துக்கள் தான் இன்றைக்கு நமக்கு உயிர்ப் பொருளாக இருக்கின்றன. கவிதைகள் சில நேரத்திலே நம்மை ஏமாற்றி இருக்கின்றன; கவிதைகள் நம்மைத் தாழ்த்தி இருக்கின்றன; கவிதைகள் நம்மைக் கைவிட்டிருக்கின்றன. அந்தக் கவிதைகளுடைய வரிசையிலே கலைஞருடைய கவிதை இடம் பெறவில்லை. காரணம், அவர் அறிஞர் அண்ணா மறைந்தபோதே கூட, சமுதாயத்திற்காக — நாட்டிற்காக தன்னை ஒப்படைத்துக் கொள்கிற உணர்வு காரணமாக அறிஞர் அண்ணா அவர்களுக்கு, இரங்கல் கவிதை பாடுகிறபோதே அதிலேயும், ''அறிஞர் அண்ணா அவர்களே உங்களுடைய இதயத்தை இரவலாக எனக்குத் தாருங்கள். நான் மறுபடியும் தங்களிடத்திலே வந்து சேருகிறபோது, அந்த இதயத்தைத் திரும்பத் தருகிறேன்'' என்று கவிதையிலே பாடுவதன்

மூலமாக, அந்த உணர்வுகளைத் தன் உள்ளுணர்வுகளாகப் பெற்றுக் கொண்டவர் என்பதை நீங்கள் எண்ணிக் கொள்ள வேண்டும்.

அதேபோல அவர் எந்த வகையிலே தன்னை வளர்த்துக் கொண்டார் என்றால், அவர்படித்த அளவுக்கு தொடர்ந்து இலக்கியங்களைப் படிக்கின்றவர்கள் பல பேர் இல்லை; சிலப்பதிகாரமோ — சீவகசிந்தாமணியோ — புறநானூறோ — திருக்குறளோ – அவற்றைத் தொடர்ந்து படித்து, எண்ணியெண்ணி - உணர்ந்து உணர்ந்து - போற்றிப் போற்றித் தன்னுடைய உணர்வுகளுக்கு அதை விருந்தாக்கி— அந்த உணர்வை மற்றவர்களுக்கு விருந்தாக்குவதற்காக, அந்த உணர்வை வடித்துத் தந்து, அப்படிக்கலைஞர் அவர்கள் தன்னையே உருவாக்கிக் கொண்டவர்கள். அப்படி உருவாக்கிக் கொண்ட காரணத்தாலேதான் சிலப்பதிகாரத்தைப் பற்றி அவர் பாடுகிறபோது கருத்துவளத்துடன் ஓசை நயமும் அங்கே பிறக்கிறது.
ஒரு வகையிலே அவர் சொல்லுகிறார்.

‘வீரர்க்கு நெஞ்சில் வியப்புத்தோன்றும்
உவகையும் அழுகையும் ஒருதாய் மக்கள்
ஒருவரை ஒருவர் நிழல்போல் தொடர்வர்
இந்த —
எட்டுச்சுவை
பிட்டுத்தமிழ்
கட்டித்தயிர்
வட்டில் நிறை
கொட்டித் தர
பட்டுக்கொடி
கொற்றக்குடை
முத்துச்சர
சோழனூர் வருவீரே

சுவைவிளக்கம் தருவீரே — என, அந்த ஓசை நலத் தோடும் அவர் பாடமுடிவதற்குக் காரணம், அந்த ஓசை நலத்திலே தன்னை ஈடுபடுத்திக் கொண்டவர். சிலப்பதி காரத்தைப் பற்றி அவர் பாடிய பாடலிலே ஒரு சிறு பகுதி யையே நான் எடுத்துக் காட்டினேன்.

## அணுகுமுறையில் பெரியாரும் அண்ணாவும்

தந்தை பெரியார் அவர்களைப் பற்றி அவர் பாடுகிற போதும் அந்த உணர்வுகளை முழுஅளவுக்கு எடுத்துக் காட்டுகிறார். அங்கேகூட ஒன்றைச் சொல்கிறபோதெல்லாம் நகைச்சுவை உணர்வுடன் அதனை மாற்றிச் சொல்லுகிற உணர்வு, ஒன்றை வேறுபடுத்திச் சொல்லி அதன்மூலமாக அதை உணரவைக்கின்ற உணர்வு—இவைகள் அவருக்கு இயல்பாக இருக்கின்ற காரணத்தாலே அவர் அங்கே பெரியாரைப் பற்றிப் பாடுகிறபோது சொல்லுகிறார் ;

'கவியெழுதும் ஆற்றல் எனக்குண்டென்ற காரணத்தால்
கவியரங்கத் தலைமைக்குத் தூண்டுகோலாய்த் துணை நின்ற
கணபதியை நினைக்கின்றேன் கவியரங்கம் தொடர் கின்றேன்
ஆர். வி. கணபதியை நினைக்கின்றேன்
அழகுதமிழ்க் கவியரங்கம் தொடங்குகின்றேன்'

(**ஆர். வி. கணபதி**, கலைஞருடைய நண்பர்; மறைந்து போனவர், சேலத்திலே தமிழ்ச் சங்கம் தொடங்கியவர்) **கணபதி** என்று சொன்னவுடனே, மற்றவருடைய நினைவில் என்ன தோன்றுகிறதோ - அந்த உணர்வை ஏற்படுத்தித் தன்னுடைய நண்பனை நினைக்கின்றேன் என்கிறார்.

''பூமியிலே நம்மை வாழவைத்து வளரவைத்த
சாமிதனை முதன்முதலில் தொழுதிடுவோம் — இராம
சாமிதனை முதன்முதலில் தொழுதிடுவோம் —பெரியார்

**இராமசாமி**தனை முதன்முதலில் தொழுதிடுவோம்,'' — என்று சாமியை **இராமசாமி** ஆக்கி, **இராமசாமி**யைப் பெரியாராக்கி, அப்படி ஆக்குகிறபோது சாமி நினை வுடையவர்களாக வந்திருப்பவர்களைப் பெரியார் **இராமசாமி** யினிடத்திலே இழுத்துவருவதற்காக அப்படி ஒருமுறையை அவர் கையாண்டுள்ளார்.

என்னுடைய நண்பர்கள் கூடச்சில நேரத்திலே கடவுள் நினைப்பு கடவுள் பேச்செல்லாம் தவறு என்று, கடவுளைப் பற்றி எதிர்மறையாகப் பேசுகின்றபோது, எனக்குத் தோன்று கின்ற ஒரு கருத்து, எதிர்மறையாக பேசுகிறபொழுது அந்தக் கருத்தை எட்டுப்பேர் ஒப்பினால், உடன்பாட்டு முறையிலே பேசுகிறபோது எண்பது பேர் அவற்றை ஒப்புவார்கள் என்பது அறிஞர் அண்ணா அவர்கள் கொண்ட கருத்து அது! அது எனக்கு உடன்பாடான கருத்து என்னுடைய தம்பி **திருமாறனுக்குக்** கூட அது உடன்பாடானது அல்ல. (சிரிப்பு) தம்பியாக இருக்கிற போது உடன்பாடில்லாமல் உள்ள கருத்து, அண்ணனாகிறபோது உடன்பாடு உடைய தாக ஆகும் (சிரிப்பு), எனவே, அப்படி எடுத்துச் சொல்லு கிற முறையினாலே அண்ணா அவர்கள் கொண்டமுறை உடன்பாட்டு முறையிலே சீர்திருத்தத்தை வெற்றிபெறச் செய்வதிலேதான் தமிழ்ச் சமுதாயத்திற்கு,அதிக அளவிற்குப் பயனுள்ளவழியிலே பணியாற்றமுடியும் என்று கருதினார்கள்.

தந்தை பெரியாருடைய நீண்டகாலக் கருத்துக்களை யெல்லாம் எண்ணிப் பார்த்திருக்கிற எனக்குப் பெரியார் அவர்கள் கூடச்சில சூழ்நிலைகளில், சில குறிப்பிட்ட வட்டங் களிலே நின்று பேசுகிறபொழுது "கடவுள் பற்றி எனக் கொன்றும் கவலை இல்லை; கடவுள் இருக்கிறாரோ இல்லையோ; நீ நம்பினால் நம்பு; நீ நம்புவதைப் பற்றி எனக்கொன்றும் வருத்தமில்லை; நம்புகிற நீ தினம் இரண்டு தேங்காயை ஏன் பூசையிலே வைக்கின்றாய்? நம்புகிற நீ எதற்காகக் கோயிலுக்குப் பொருளைப் பாழாக்குகிறாய்? ஆண்டவன் ஏழைகளினிடத்திலே காட்டுகிற அன்பிலேதான்

இருப்பார் என்று அடியார்களெல்லாம் சொன்னார்களே! அந்த ஏழைகளுக்கு நீ உதவி செய்வதிலே கடவுளை எண்ணு கிறவனாக இருந்தால் எனக்கு ஒன்றும் மாறுபாடு இல்லை'' என்று அப்படித் தந்தை பெரியார் அவர்களே கூட ஒருகால கட்டத்திலே பேசியிருக்கிறார்.

ஆனால் அவருடைய அழுத்தமான ஒரு கருத்து கடவுள் உடன்பாட்டிற்குப் பின்னாலே தெளிவு பிறக்காது என்பது! தந்தை பெரியாருடைய எண்ணப்படி கடவுள் உடன்பாட்டை முழுவதுமாக எதிர்த்தால்தான் தெளிவு பிறக்கும் என்று கருதினார்.

ஆனால் அறிஞர் அண்ணா அவர்கள் கருதியது அது ஒரு கருத்து. இல்லையென்று சொல்வது அந்தக் கருத்து ஒன்றின் காரணமாக தெளிவு பிறப்பதற்கான தோற்றுவாயே இல்லாமல் போய் விடக்கூடியவர் பெரும்பாலோர். அந்தத் தோற்றுவாய் ஏற்பட்டு அவனவனாகத் தெளிவதுதான் உண்மையே தவிர, யார் சொல்லியும் கேட்டாலுங் கூடத் தெளிவு அவனுக்குச் சொந்தமில்லை. எனவே, அவன வனுக்கு ஒரு தெளிவு பிறக்க வேண்டுமானால் தோற்றுவாயை அடைத்து விடக்கூடாது. எனவேதான் ''ஒன்றே குலம்; ஒருவனே தேவன்'' என்ற கருத்தை அறிஞர் அண்ணா அவர்கள் குறிப்பிட்டார்கள். கடவுள் உண்டா? இல்லையா? என்பதைப்பற்றிக் கடவுளுக்கும் கவலையில்லை; அறிஞனுக்கும் கவலையில்லை; இன்னும் சொல்லப் போனால் உண்மையான மக்கள் தொண்டனுக்கும் கவலை இல்லை; இரண்டும் இல்லாதவனுக்குத்தான் அதிகக் கவலை.

ஆகவே, அப்படிப்பட்ட ஒரு சூழ்நிலையில் கடவுளைப் பற்றிய கருத்திலே கூட ஒரு மாறுபாடு இருந்தாலுங்கூட, கலைஞர் அவர்கள் அறிஞர் அண்ணா அவர்கள் வழியைப் பின்பற்றி, ஒரு கோணத்திலே மக்களுடைய கவனத்தை இழுத்து, இன்னொரு கோணத்திலே தந்தை பெரியாரைப்

பற்றி அவர்களுக்கு நினைவூட்டுகிற முறையிலே அந்தக் கவிதையிலே பாடுகிறார்.

'கவியரங்கம் பாடவந்த, காணவந்த பெருமக்காள்!
திருவரங்கப் பெருமாள்போல் படுத்திருந்த
தமிழுணர்வைத்
திசையெட்டும் சிலிர்த்தெழுந்து முழங்கச் செய்து
தீரமிகு பணிகள் பல ஆற்றியவர் பெரியாரன்றோ?''

தமிழ் உணர்வு திருவரங்கப் பெருமாள் போலப்படுத் திருந்தது; எழுந்திருப்பதாக இல்லை. பெரியார்தான் அதை எழுந்திருக்கச் செய்தார் என்று சொல்லி

'தெருவரங்கம் கலையரங்கம் இசையரங்கம்
திரையரங்கம்
எல்லாமே 'அம்மாமி அத்திம்பேர்'
ஜலதரங்கம்! அதுமாற்றித்
தமிழரங்கம் தனியரங்கம் கண்டவர்க்குக்
கவியரங்கம் பாடுவது பொருத்தமன்றோ? —

என்று அவர்பாடிய இந்தக் கவிதையை நீங்கள் எண்ணிப் பார்த்தாலும், கலைஞர் இடத்திலே கருத்து உண்டு; அதை எடுத்துச் சொல்லும் ஆற்றல் உண்டு; அதற்கு வடிவு தருகிற கலைத்திறன் உண்டு; அதை அழகுபடுத்துகிற கவியின் சிறப்பு உண்டு. இவற்றை நாட்டுக்குப் பயன் படுத்துகிற உயர்ந்த குறிக்கோள் உண்டு என்று காணலாம்.

## கலைஞர் வழியில் இளைஞர்கள் இலட்சிய நடை போட வேண்டும்.

எனவே, குறிக்கோள் வாய்ந்த கலைஞர் கவிஞராகக் திகழ்வதிலே வியப்பில்லை. அவர் வழியில் தமிழ் இளைஞர்கள் அவருடைய இலட்சியத்தை ஏற்றுக்கொண்டு, வாழ்கிறவர்களாக அது மூலமாக அறிஞர் அண்ணா அவர்களும் தந்தை பெரியார் அவர்களும் தமிழுக்காக —

தமிழ் நாட்டிற்காகப் பாடுபட்டு அவர்கள் ஆற்றிய பணி தொடர்ந்து இந்தநாட்டிற்குப் பயன்படச் செய்கிறவர்களாக இளைஞர்கள் விளங்க வேண்டும் என்று நான் விரும்புகிறேன்.

இந்த அருமையான இலக்கியத் திறனாய்வு நிகழ்ச்சியை ஏற்பாடு செய்த நண்பர்கள் எந்த உயர்ந்த நோக்கத்தோடு இந்த நிகழ்ச்சியை ஏற்பாடு செய்தார்களோ அதை எண்ணிப் பார்க்கும் மற்றவர்களெல்லாம் இலக்கியத்திலே ஆர்வம் கொள்ள வேண்டும். ஒன்று படிப்பது; மற்றொன்று படிப்பதை மற்றவர்களிடத்திலே எடுத்துச் சொல்வது — எழுதுவது ! ஆழ்ந்த கருத்துக்களை — உயர்ந்த எண்ணங்களை குறிக்கோளை மற்றவர்களிடத்திலே பதியவைப்பது—குறிக்கோள் இழந்து நடக்கின்ற இந்த தமிழச் சமுதாயத்தை, குறிக்கோள் உடையதாக — குறிக்கோளை ஏற்றுக் கொண்டு செயல் படுவதாக ஆற்றல் நடைபோடச் செய்வது இவையெல்லாம் இளைஞர்கடன்; இவையெல்லாம் தமிழ்நாட்டு மக்களுடைய கடன் என்ற உணர்வை நீங்கள் வளர்ப்பதிலேதான் இந்த இலக்கிய அணியினுடைய பணி ஒளி பெறக்கூடிய நல்வாய்ப்பு இருக்கிறதென்று நான் நினைவூட்ட விரும்புகிறேன்,

இன்னும் ஒரு பத்து நிமிடம் உணவிற்குக் காலதாமத மாகிறது என்று நீங்கள் கருதினாலுங்கூட,

'செவிக்குணவு இல்லாத போழ்து சிறிது
வயிற்றுக்கும் ஈயப் படும்' — என்னும் அந்தக் குறளுக் கேற்ப நீங்கள் பொறுத்திருக்க வேண்டும் என்று நான் விரும்புகிறேன்.

செவிக்கு உணவு இருந்தால் மட்டும் நாடு வாழாது; அந்தச் செவி உணவு சுவையுடைய உணவாக இருந்தால் மட்டும் நாடுவாழாது ; பயனுள்ள உணவாக இருக்க வேண்டும்; சத்துள்ள உணவாக இருக்க வேண்டும் என்று உணவைப் பற்றிச் சொல்வதைப் போலத்தான் தமிழ்ச் சமுதாயத்தை வாழ வைக்கின்ற உணவாக செவி உணவு

தமிழகத்திலே முழங்கிக் கொண்டிருப்பதற்கு இலக்கிய அணி தேவை என்று நானும் கலைஞர் அவர்களும் கருதினோம். அதைப் பெருமளவிற்கு இலக்கிய அணியினர் நிறைவேற்று கிறார்கள்.

ஆனால் அப்படி நிறைவேற்றுகிறபோது தமிழ் மக்களு டைய உள்ளத்திலே பதிய வைக்க வேண்டிய எண்ணத்தை இலக்கிய அணியிலே உள்ளவர்கள் பகுத்தறிவு வாதம் பேசுகின்ற அருமைத் தோழர்கள் தந்தை பெரியாரை, பேரறிஞர் அண்ணாவைப் போற்றுகின்ற சிந்தனையுள்ள வர்கள் அந்த எண்ணத்தை மக்களிடத்திலே பக்குவமாகப் பரப்புகிற ஒரு ஆற்றலைப் பெறவேண்டும் என்று நான் விரும்புகிறேன்.

தமிழ் நமக்கு மூச்சு. அந்தத் தமிழ் மூச்சை நாம் இழக்காமல் தொடர்ந்து இயங்கிக் கொண்டிருப்பதற்குத் துணை நிற்பது அந்த மொழியினிடத்திலே இருக்கிற பற்று. அந்தப் பற்று இல்லாவிட்டால் அது தமிழ் மூச்சாக இருக் காது. தமிழ் மூச்சிலே வேறு பல மூச்சு கலக்கும். திரைப்படக் கொட்டகையிலே கூட்டமாக இருக்கிறபொழுது எவனவன் மூச்சோ எவனவனுக்கோ கலப்பதைப் போல கற்புக்கரசி மூச்சிலே கூட அங்கேயுள்ள மிக இழிந்த நோக்குடையவனுடைய மூச்சுக் கலக்கக் கூடிய அளவிற்கு நெருங்கி உட்கார வேண்டிய நிலைமை ஏற்படு வதைப் போல தமிழனுடைய தமிழ்ப்பற்றோடு கூடிய மூச்சிலே பிறமொழி ஆதிக்க மூச்சுக் கலந்து விடுகிற நிலை மையைக் காணுகிற போதெல்லாம் தமிழர்கள் தமிழனுடைய மூச்சைப் பாதுகாக்கிற அந்த உணர்வைக் பாதுகாக்கிற உறுதியான எண்ணத்தை மக்களிடத்திலே வளர்க்க வேண்டும்.

ஒரு இயக்கம் — அரசியல் இயக்கம் வெற்றி பெறலாம்; தோற்கலாம். அதுமிகச் சாதாரணம். நடமாடுகிறவனே சில நேரத்திலே தடுக்கி விழலாம்; விழுவது சாதாரணம் எழுந்து நடக்க முயற்சிப்பது மிக முக்கியமானது.

## தமிழ்ப்பகை குறித்து எச்சரிக்கை உணர்வு தேவை.

அதைப்போல ஒருஅரசியல் கட்சி தோல்வி அடையலாம்; ஆட்சியை இழக்கலாம். அனால் தமிழ் மக்கள் தங்களுடைய தன்மானத்தை - தாய்மொழிப்பற்றை — அந்தத் தாய் மொழியைப் பாதுகாக்கின்ற கடமை உணர்வை — தாய் மொழிக்குப் பகையாக இருக்கிறவர்களைப்பற்றிய எச்சரிக்கை உணர்வை என்றைக்கும் இழந்துவிடக் கூடாது. அதை இழக்காமல் இருக்க வேண்டுமானால் அந்த உணர்வை நீங்கள்தான் அவர்களிடத்திலே உருவாக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

இந்த நாட்டிலே படித்தவர்கள் சிலபேர் தங்களுடைய கடமையைப் பலகாலம் செய்ததில்லை. படித்தவர்களிலே பலர்-அந்தப் படித்தமக்கள் பாமர மக்களிடத்திலே கலந்து பழகி அவர்களுக்காக எண்ணிப் பார்க்கிற ஒரு பயிற்சியைப் பெறாத காரணத்தால் அவர்களுக்காகத் தொண்டாற்ற வில்லை. நல்லெண்ணம் படைத்தவர்கள் இருந்தார்கள். நல்ல நோக்கத்தைச் சொன்னவர்கள் இருக்கிறார்கள். ஏழைகளுக்காக எண்ணிப் பார்த்தவர்கள் இருக்கிறார்கள்! 'கல்லார்க்கும் கற்றார்க்கும் களிப்பருளும் களிப்பே' என்று பாடிய பக்தன் முறையிலே கல்லாத மக்களுக்காகவும் கசிந்து உருகியவர்கள் இருக்கிறார்கள்; ஆனால் அந்த மக்களை வாழ வைப்பதற்காகத் திட்டம் தீட்டிச் செயலாற்றியவர்கள் - அதற்காகப் பாடுபட்டவர்கள் பலபேர் இல்லை.

மேலும் படித்தவன் தன்னலத்தைப் பாதுகாக்கிற அவசியத்திற்கு ஆளாகிற ஒரு சூழ்நிலைக்கு இரையாகி விடுகிறான்.

எனவே படித்தவர்களாலே கிடைக்காத அந்தப்பலன்கூட இன்றைய பாமர மக்களிடத்திலே போய்ச் சேர்ந்தால் தவிர இந்த நாடு வாழாது என்பதை எண்ணிப்பார்க்கிற

இளைஞர்களும் புலவர்களும் ஆர்வமுள்ள தோழர்களும் அந்தப் பொதுமக்களிடத்திலே தமிழ்ப்பற்று வளர என்ன வழி? தமிழ்ச் சிந்தனையை ஓங்கச் செய்ய என்ன வழி? தமிழினத்தைப் பாதுகாக்க என்ன வழி? இலங்கைத் தமிழர்களுக்கு ஏற்பட்ட இழிவானாலும் கொடுமையானாலும், மலேசியா, சிங்கப்பூர் போன்ற பலவெளி நாடுகளில் வாழும் தமிழர்க்கு ஏற்பட்டு வரும் தொல்லைகளானாலும் சரி அப்படிப்பட்ட நிலைமைகளை மாற்றியமைக்கக் கூடிய ஒரு ஆற்றல் ஏற்படவேண்டுமானால் **தமிழகத்திலே தமிழன் தன்னைத்தானே ஆட்சி செய்து கொள்ளக் கூடிய ஆற்றல் மிக்கவனாக இருக்கிறான் என்ற நிலையை உருவாக்கித்தீர வேண்டும்**

கலைஞர் கருணாநிதி ஆட்சி பீடத்தில் அமர வேண்டுமென்றோ — அல்லது எங்களைப் போன்றவர்கள் எப்படியாவது அமைச்சராகி விடவேண்டுமென்றோ இந்தக் கருத்தை நான் எடுத்துச் சொல்லவில்லை. தமிழ் மக்களுக்கு வழிகாட்டுகிறவன், ''தமிழாய்ந்த தமிழ் மகன்தான் தமிழகத்தின் முதலமைச்சாய் வருதல் வேண்டும்'' என்று புரட்சிக்கவிஞர் பாரதிதாசன் அவாவோடு எடுத்துச் சொன்னாரே, அந்த அவாவினை நிறைவேற்றுகிற அளவுக்குத் தமிழ் மக்களிடத்திலே அந்தத் தமிழ் ஆர்வம், தமிழன் என்ற உணர்வு, தமிழனுக்கு எங்கே கேடு விளைவிக்கப்பட்டாலும் அந்தக் கேட்டினைத்துன்பத்தைக் கேட்கிற போது, அவர்கட்கு ஆதரவு காட்டித் துணைநிற்கும் ஒரு உணர்வு நம்மிடத்திலே வளர்ந்தாக வேண்டும்.

தமிழ்மக்களுடைய இயல்பானபோக்கு ஏனோதானோ என்றிருப்பது ; இயல்பானபோக்கு இயற்கையிலே நடப்பது நடக்கட்டும் என்று காத்திருப்பது ; இயல்பான போக்கு யாருடைய தவறான நடவடிக்கைகளைப் பற்றியும் கவலைப் படாமலிருப்பது ; இயல்பான போக்கு ஊரே கொள்ளை போனாலும் உரத்த குரலில் யாரிடத்திலும் சொல்லாம

லிருப்பது; இயல்பானபோக்கு எவன்முதுகில் ஏறியிருந்தாலும் கூட அடுத்தவனுக்குத் தெரியாமல் ஏறியிருக்கட்டும் என்றிருப்பது ! தமிழனைப் போல ஒரு ஏமாளி தமிழனைப் போல ஒரு பைத்தியக்காரன் தமிழனைப்போல தன் இனப் பெருமையைக் கருதாதவன்-தமிழனைப்போல உலகத்திலே, எங்கே போய் நின்றாலும் அவன் யார் என்று பிறர் அடையாளம் கண்டு கொள்ளக் காரணமாக இல்லாதவன் வேறு யாரும் இல்லை.

## தமிழனின் துயர நிலை

அந்த ஒரு சூழ்நிலைக்கும் மனப்பான்மைக்கும் காரணம் உண்டு. உலகத்திலே தமிழனைப் போன்று ஒரு பழமையான இனத்தைச் சார்ந்தவன் வேறு யாரும் இல்லை. தமிழ் மொழியைப் போல் மிகத் தொன்மையான காலத்திலே தோன்றிய இன்னொரு மொழி இல்லை. தமிழனைப் போல் பரந்த நோக்கங்களுக் கெல்லாம் இடமாக வாழ்ந்த இன்னொரு சமுதாயம் இல்லை. தமிழனைப்போல் பல்வேறு அலைகளிலெல்லாம், சிக்கிச் சிக்கி அதற்குப் பின்னர் எப்படியோ கரையேறி நிற்கிறவன் வேறு யாரும் இல்லை. உலகத்திலே உள்ள எல்லா விதமான நாட்டு மக்களோடும் தொடர்புடையவனாக வாழ்ந்தவன் என்ற பெருமைக்குரிய தமிழன் தான் உலகத்திலேயுள்ள பல்வேறு நாடுகளுடைய கலாச்சாரப் பண்பாட்டுத் தொடர்புகளுக்கு ஆளானவனாக ஆகித் தீர்ந்தவன். வயதான ஒரு கிழவன் — 150 வயதிலே உள்ள ஒரு வயதான மனிதன், அதுவும் ஒரு பக்தனாக இருப்பானே யானால் அவன் எண்ணங்களிலே எதுபற்றியும் கவலைப் படாமல் நிலைத்துவிட்ட ஒரு மோன நிலையிலே இருப்பதைப் போல தமிழன் மெல்ல மெல்ல அந்த நிலைக்கு ஆளாகி விட்டான். இளமைக்கும் தமிழனுக்கும் வயதிலே தொடர்பு ஏற்படுவதைத்தவிர இன உணர்ச்சியிலே தொடர்பு ஏற்படுவதில்லை.

எனவேதான் புரட்சிக் கவிஞன் ஒருவன்தான் பிறந்தான். புரட்சிக்கவி பிறந்த பொழுதே பிறந்த கவிமணி தேசிய விநாயகம் அந்த புரட்சி உணர்ச்சியைப் பெற முடியவில்லை. அதே காலத்தில் வாழ்ந்த நாமக்கல் கவிஞர் அந்த அளவு உணர்ச்சியைப் பெறமுடியவில்லை. 'தமிழன் என்றோர் இனமுண்டு தனியே அவர்க்கோர் குணமுண்டு' — அதுவும் வரலாற்று ஏட்டிலே உண்டு என்று சொல்கிற அளவுக்கு நாமக்கல் கவிஞர் பாடினாலுங்கூட அந்தத் தனிக் குணமுங் கூட அவன் பரந்த நோக்கத்திற்கு அடையாளமாக இருக்கிறதே தவிர தன் இனத்தைக் காப்பாற்றிக் கொள்கிற ஆற்றலுக்குக் காரணமாக அது அமையாமல் போய்விட்டது.

எனவே இவற்றையெல்லாம் எண்ணிப் பார்த்து தமிழ் மக்களை ஒரு இனவுணர்வுள்ள எலும்பும், சதையும் இரத்த ஓட்டமும் உள்ள ஒரு மக்கள் கூட்டமாக மாற்றி அமைக்கிற அந்த உணர்ச்சியை நாம் பெற்றாக வேண்டும்.

### மேல் நாட்டார் உணர்ந்த தமிழின் சிறப்பு

நான் உங்களுக்குத் தோன்ற வேண்டிய ஒரு பெருமை உணர்ச்சிக்காக இதனைச் சொல்கிறேன். 250 ஆண்டுகளுக்கு முன்னால் தஞ்சை மாவட்டத்திலே தரங்கம்பாடி பகுதியிலே வந்து தங்கியிருந்த ஒரு ஜெர்மன் அல்லது போர்ச்சுக்கீசிய பாதிரியார், — அந்த **சீஜட்பாக்** என்கிற பெயருடைய பாதிரியார் ஆசிய நாடுகளிலே சுற்றுப்பயணம் நடத்தினார். தமிழ்நாட்டிலும் ஏறத்தாழ முப்பது ஆண்டுகாலம் வாழ்ந்து தமிழைப்படித்தார்; தமிழ்ப் புலவர்களிடத்திலே பழகினார். தமிழ் எழுத்துக்களிலேயிருந்து தமிழ் இலக்கியம் வரையில் தேர்ந்தார். அதற்குப் பின்னர் அவர் தன்னுடைய நாட்டிற்குச் சென்றார். அங்கு அவருக்கு 200 ஆண்டுகளுக்கு முன்பு முதலாவது ஜார்ஜ் மன்னர் காலத்தில் ஒரு வரவேற்பு அளித்தார்கள். அந்த வரவேற்பு நிகழ்ச்சியில் அந்த

நாட்டினுடைய மிகப்பெரிய பாதிரி ஆர்ச்பிஷப் ஆப் காண்டர்பரி அவர்கள் அவரை வரவேற்றார். அப்படி வரவேற்கிறபோது சீஜட்பாக் பாதிரியார் கிழக்கு ஆசிய நாடுகளிலும், இந்தியாவிலும் தங்கியிருந்து சமயப்பணி ஆற்றியதற்காகப் போற்றிப் புகழ்ந்து, அவ்வளவு பெரிய அரும்பணியாற்றிய பெரியவரை நான் வரவேற்பதற்கு ஏற்ற உயர்ந்த மொழி இலத்தீன் மொழி. அந்த இலத்தீன் மொழியிலே நான் சீஜட்பாக் அவர்களைப் பாராட்டி இந்தவாழ்த்திதழைப்படிக்கிறேன் என்று முதலாம் ஜார்ஜ் முன்னிலையில் அவர் படித்து வழங்கினார். இலத்தீன் மொழியிலே வழங்கப்பட்ட அந்த வரவேற்பைப் பெற்றுக் கொண்டு சீஜட்பாக் நன்றி கூற எழுகிறார்; தொடங்குகிறார், ''என்னை| ஒரு உயர்ந்த மொழியிலே வரவேற்றால்தான் அது எனக்குப் பெருமை என்று ஆர்ச் பிஷப் காண்டர்பரி அவர்கள் இலத்தீன் மொழியிலே வரவேற்புரை வழங்கினார்கள். என்னிடத்திலே வைத்திருக்கிற பேரன்பிற்கும் பெருமதிப்பிற்கும் நான் என்றும் நன்றியுடையவன்'' என்று சொல்லி விட்டுச் சொல்கிறார்; ''ஒரு உயர்ந்த மொழியிலே என்னை வரவேற்பது எனக்குத் தருகின்ற ஒரு பெருமை என்று கருதி காண்டர்பரி பாதிரியார் இப்படி வழங்கியிருக்கிறபோது எனக்கு இவ்வளவு பெரிய வரவேற்புத் தந்த உங்களுக்கு நானும் உயர்ந்த மொழியிலேதான் பதிலளிக்கவேண்டும். என்னுடைய நன்றியதலை ஒரு உயர்ந்த மொழியிலே சொல்வதை நான் உங்களுக்குச் செய்கிற பெருமையாகக் கருகிறேன்-எனக்கும் பெருமையாகக் கருதுகிறேன். உலகம் தோன்றிய நாள் முதல் உலகத்திலே இறைவனாலே படைக்கப்பட்ட மொழிகளிலேயெல்லாம் மிக உயர்ந்த மொழி என்று நான் அறிந்து வந்திருக்கின்ற 'தமிழ் மொழியில் உங்களுக்கெல்லாம் நன்றி தெரிவிக்கிறேன்'' என்றார். அந்த சீஜட்பாக் பாதிரியார் இங்கு முப்பதாண்டுக் காலம் வாழ்ந்த உணர்ச்சியோடு இங்கிலாந்து நாட்டிலும் தமிழ் மொழியினுடைய பெருமையை

எடுத்துச்சொல்லி அந்த மொழியிலே 'நன்றி' உரைத்தார் என்று வரலாறு இருக்கிறது.

அப்படித் தமிழிலே அவர்கள் நன்றி சொன்ன அந்தப் பாதிரியார், மேல் நாட்டுக்காரர்; இங்கு தமிழ் பயின்றதன் பயனாகத் தமிழுக்கு அந்தக் கடமையைச் செய்தார். நாம் இங்கேயே இருக்கிறோம்; எந்தெந்த மொழியிலே எவனெவனுக்கோ நன்றி சொல்கிறோம்; அந்த நிலைமை மாறி, தமிழுணர்வு தமிழகத்திலே தழைக்கத்தான் கலைஞர் கவிதை இயற்றுகிறார். அந்த வழியை ஏற்றுப்பின்பற்றுங்கள் என்று உங்களை அன்போடு வேண்டிக் கேட்டுக்கொண்டு என்னை அழைத்த நண்பர்களுக்கு நன்றியையும் வரவேற்ற தோழர்களுக்கு வணக்கத்தையும் தெரிவித்து விடை பெறுகிறேன்.

(நன்றி : முரசொலி 18—11—81)



தன்மானம் தமிழார்வம் ஊட்டிவரும்
இனமானப் பேராசிரியர்
வளரும் தமிழ்போல்
வாழ்க! வாழ்க!!

★

இவண்,
**மேற்கு முகவை மாவட்ட இலக்கிய அணி**

# "கலைஞர் கவிதைகள் திறனாய்வு"

## நூல் பற்றி ... ...

'கலைஞர் கவிதைகள் திறனாய்வு' ஒன்பான் மணிகளால் தொடுக்கப்பட்டதொரு மாலையாக, ஆய்வு விருந்தாகக் கருத்துச் செல்வமாக, இனமொழிப்பற்றினை உணர்த்தும் பெட்டகமாக அமைந்து, கலைஞரின் உள்ளத்தைப் பல கோணத்தில் படம் பிடித்துக் காட்டுகிறது

— தி. மு. கழகப் பொதுச் செயலாளர்
பேராசிரியர் **க. அன்பழகன்**, M. A., M. L. A., அவர்கள்

❀

"கலைஞர்தம் கவிதைகளை நல்ல ஆற்றல் வாய்ந்த, கருத்துச் செறிவைக் கண்டுபிடிக்கும் திறன் வாய்ந்த நல்லறிஞர்களைக் கொண்டு, முத்தான கருத்துக்கள் கொண்ட கட்டுரைகளாக வெளிவந்த இந்தத் திறனாய்வு, பல்கலைக் கழகப் பாட நூலாகும் தகுதி வாய்ந்த ஒரு சிறப்பு நூல்."

— திராவிடர் கழகப் பொதுச் செயலாளர்
மானமிகு **கி. வீரமணி**, M. A., B. L. அவர்கள்

❀

"கவிதையுலகில் புதிய சிந்தனையைத் தூண்டுவதோடு, கலைஞரின் புலமை விளக்கங்காண நுழைவாயிலாக அமைந்துள்ளது இத்திறனாய்வு."

— தமிழகத் தமிழாசிரியர் கழகப் பொதுச் செயலாளர்
புலவர் **ப. அரங்கசாமி** அவர்கள்

---

விஜயா பிரிண்டர்ஸ், மதுரை-1